## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண்.** 75/19

வாக்குமூலம்..வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆண்டியப்பன் | ஜாதி | |
| த/பெ. | முத்தையா | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 59/ 2025 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 11.03.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

6. சொத்து ஏலத்தில் போனதை என்தகப்பனார் மீட்டதாக நான் முந்தையா விசாரணையில் சொல்லியிருப்பதில் எந்த வங்கியில் எந்த கடனுக்காக ஏலத்தில் போனது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. யார் யார் சேர்ந்து அந்த கடன் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். UDR புல எண் 168/5 எத்தனை உட்பிரிவுகளாக பிரிவு செய்தார்கள் என்றால் உட்பிரிவு 5A. 5 B செய்தார்கள். உட்பிரிவு 5 B என்பது பிரதிவாதி ஆறுமுகம் வகையறாவின் பேரில் இருந்தது என்றால் சரியல்ல. முத்தையா என்பவர் பேரில் இருந்தது. உட்பிரிவு 5 A யார் பேரில் இருந்தது என்றால் அந்த புல எண்ணும் முத்தையா பேரில் தான் இருந்தது. அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்திருக்கிறோம்.

7. UDR 165/b க்கு ஆறுமுகத்தின் தகப்பனாரின் பேரில் பட்டா இருந்தது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் புல எண் 168/5 a என்பது பக்கிரி முகமது மகன்கள் காஜாமுகைதீன் பெயரில் பட்டா இருந்தது என்றால் அவர்கள் பேரில் இருந்து அதை மேல் முறையீடு செய்து எங்கள்பேருக்கு மாற்றி கொண்டோம். அது தொடர்பாக அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் முன்பு விசாரணை நடைப்பெற்றது என்றால் சரிதான். மேற்படி வருவாய் கோட்டாட்சியர் நடவடிக்கையில் ஆறுமுகத்தின் தகப்பனாரோ, ஆறுமுகமோ தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான்.

8. மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்பான மேல் முறையீடு சமரசத்தின் அடிப்படையில் முடிக்கப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி சமரச முச்சலிக்காவில் காளிமுத்துவின் வாரிசுகள் சாட்சியாகத்தான் கையெழுத்து போட்டார்கள். மேற்படி சமரச

முச்சலிக்காவில் காளிமுத்துவின் வாரிசுகள் தரப்பினர்காளத்தான் கையெழுத்து போட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வருவாய் கோட்டாட்சியர் முன்பு ஏற்பட்ட சமரச முச்சலிக்காவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் இருக்கும். தாக்கல் செய்திருக்கிறோமா என்று தெரியவில்லை. மேற்படி சமரச முச்சலிக்காவில் ஆறுமுகமோ, அவரது தந்தையோ தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி மேற்படி சமரச முச்சலிக்காவின் நகல் எங்கள் குடும்பத்தில் இருக்கும் என்பதால் அதை தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான்.

9. எங்களுடைய சமரச முச்சலிக்காவின் அடிப்படைடியில் புல எண் 168/ 5 b-க்கு முத்தையா வகையறா பேரில் பட்டா மாற்றியது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. புல எண் 168/ 5 a முழுவதும் முத்தையாவுக்கு பாத்தியம் என்று சொல்வது உண்மை கிடையாது என்றாலும், அந்த புல எண் முத்தையாவின் சகோதரர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி புல எண் முத்தையாவிற்கு தனிப்பட்ட உரிமை கிடையாது என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் காலத்தில் முத்தையாவிற்கு கூட்டு குடும்ப உறுப்பினர் என்ற அடிப்படைடியில்தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் காலத்தில் முத்தையாவின் மூத்தா சகோதரரும், தந்தையும் இலங்கையில் முத்தையா பேரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. 02.05.1995-ம் வருடத்தில் புல எண் 168/ 5 a யில் ஆத்மாநாதன், சுப்பிரமணியன் ஆகிய இருவரும் பீர் முகமதுக்கு கிரையம் கொடுக்க உரிமை இல்லை என்று கட்சி செய்திருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தானது ஆத்மாநாதன் சுப்பிரமணியனின் தாயார் முத்தையாவிடமும், அவரது சகோதரரிடமும் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல.

10.மேற்படி கிரைய ஆவணத்தை மறைத்து சொத்தை அபாகரிக்க கூட்டு சதியாக செயல்படுகிறோம் என்றால் சரியல்ல. முத்தையாவின் வாரிசுகள் மிரட்டலுக்கு பயந்து பீர் முகமது மேற்படி சொத்தை அனுபவம் செய்யாமல் விட்டு விட்டார் என்றாலும், ஆத்மாநாதன் தான் தற்போது அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் கருப்பன் அம்பலத்திற்கு சொந்த ஊர் மேல் மங்களம் என்று சொல்வது உண்மை கிடையாது என்றால் சரியல்ல. கருப்பன் மனைவி சுப்பாம்மாள் பிறந்த ஊர் தான் மேல் மங்களம் என்றால் சரிதான். கருப்பன் வாரிசுகள் மூவரும் மேல் மங்களம் கிராமத்தில் பிறந்ததாக சொல்வது கிடையாது உண்மை கிடையாது என்றாலும் இரத்தினக்கோட்டை கிராமத்தில் தான் பிறந்தார்கள் என்று சொல்வது தவறு. எங்களுக்கு பூர்வீக மனைக்கட்டு மேல் மங்களம் கிராமத்தில் தான் இருக்கிறது. மேற்படி மனைக்கட்டை கருப்பையா, முத்தையா, காளிமுத்து மூவரும் பெரியய்யா என்பவருக்கு விற்றார்கள்.

11. மேற்படி கிரைய சொத்து கருப்பாவிற்கு பூர்வீகம் கிடையாது என்றாலும் அவரது மனைவி குப்பம்மாளின் சொத்து என்றால் ஆமாம். குப்பாம்மாளின் பெற்றோருக்கு ஆண் வாரிசு

கிடையாது. கருப்பையா வீட்டோடு மாப்பிளையாக சென்று விட்டார். என் தாத்தா கருப்பையா இலங்கை சென்ற போது அவரது மகன்கள், மகள்களை இலங்கைக்கு அழைத்து சென்றாரா என்றால் ஆமாம். எனது அத்தை இலங்கையில் தான் இருக்கிறார். எனது தந்தை எந்த வயதில் இந்தியா வந்தார் என்றால் 10, 15 வயதிருக்குள் வந்தார். இந்தியா வந்தபோது எனது அப்பத்தாவின் தங்கை வீட்டில் தங்கினார். அ.வ்வாறு தங்கிய ஊர் இரத்தினக்கோட்டை ஆகும். இரத்தினக்கோட்டையில் தங்கியதால் முத்தையாவின் பூர்வீக ஊர் இரத்தினக்கோட்டை ஆகாது என்றால் சரியல்ல.

12. நிரூபணவாக்குமூலத்தில் 1966-ம் வருடம் பிரதிவாதி ஆறுமுகத்தின் அப்பா இந்தியா வந்தபோது அண்ணன் என்ற அன்பினால் தாவா சொத்தில் குடியிருக்க வைத்தார் என்று சொல்வது உண்மை கிடையாது என்றால் சரியல்ல. அவ்வாறு குடியிருக்கும் போது முத்தையா சொல்லும்போது காலி செய்ய ஒப்புக்கொண்டு குடியிருந்தார் என்று சொல்வது உ ண்மை கிடையாது என்றால் சரியல்ல. அதிலுள்ள ஓட்டு வீட்டையும் கருப்பையா தான் கட்டினார் என்று நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது சரியா என்றால் தவறு. நிரூபணவாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். நிரூபணவாக்குமூலத்திற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13.மேற்படி வீட்டிற்கான வரிவிதிப்பு கருப்பையா பேரிலும், ஆறுமுகம் பேரிலும் ஏற்பட்டுள்ளது என்றாலும், நான் சொல்வது போல் முத்தையா, சிகப்பி பேரில் ஏற்படையவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு மேல் புறம் எங்கள் சகோதரர்கள் வீடு கட்டி குடியிருக்கிறோம் என்றால் சரிதான். என் அப்பா இருக்கும் போது ஒரே வீடாக இருந்தது. அந்த வீட்டிற்கு ஏற்பட்ட ரசீது தான் வழக்கு சொத்து ரசீது என்று தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பெற்றோர் மேல் புறம் குடியிருந்த வீட்டிற்கான ரசீது தாக்கல் செய்ய முடியும். அசல் வழக்கு எண். OS 57/2005- வழக்கில் 2-ம் மேல் முறையீடு நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். அந்த வழக்கு காலத்தில் இருந்து எங்கள் உரிமையை ஆறுமுகம் மறுக்கிறார் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண். OS 57/2005- வழக்கு தாக்கல் செய்வதற்கு எத்தனை நாட்களுக்கு முன்னால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் பக்கிரி முகமது பேரில் இருந்து எங்கள் பேருக்கு பட்டா ஏற்பட்டதிலிருந்து பிரச்சனை ஏற்பட்டது. பட்டா ஏற்பட்ட தேதி ஞாபகமில்லை. அசல் வழக்கு எண். OS 57/2005- வழக்கில் நானும் தரப்பினர் என்றால் சரிதான்.

14. தாவா வழக்கு எங்கள் குடும்பத்தை சேர்ந்த அனைவரும் சேர்ந்து தாக்கல் செய்திருக்கிறோம். தாவா சொத்தை பொருத்து எங்கள் சகோதரர்களுக்குள் பாகம் பிரித்து கொண்டோமா என்றால் இல்லை. வாய்மொழி ஏற்பாடு செய்து கொண்டுள்ளோமா என்றால் வீடு மட்டும் கட்டியிருக்கிறோம். எங்கள் குடும்பத்துக்கு விவசாய நிலங்கள் எதுவும் இல்லை. அசல் வழக்கு எண். OS 57/2005- வழக்கு தள்ளுபடி ஆன அடிப்படையிலும்,

பிரதிவாதி குடியிருந்து வருவதன் அடிப்படைடியிலும் காலி சுவாதீனம் கோரி தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரிதான். எங்கள் உரிமையை மறுத்து சட்டக்காலத்தை தாண்டி ஆறுமுகம் குடியிருந்து வருவதால் தாவா வழக்கு காலவரை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் தந்தைக்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்மொழி குடும்ப ஏற்பட்டில் பிரதிவாதியின் தந்தைக்கு கிடைத்த சொத்து என்றால் சரியல்ல. வழக்கு புல எண் சொத்தை எனது தந்தையும், எனது சிறிய தந்தையும் காளிமுத்துவும் எனது சிறிய தந்தை மனைவியிடம் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்த கிரைய தொகையை கொண்டு தான் புயல் கடன் செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு ஆவணங்கள் ஏற்படுத்தி கொண்டு எங்கள் குடும்பத்தினரிடம் கிரையம் பெற்ற சிறுபாண்மையினரை மிரட்டி அவர்கள் இடத்தை விட்டு சென்று விட்டார்கள் என்ற கேள்வி பிரதிவாதிகள் தரப்பில் எழுப்பப்பட்டது. மேற்படி கேள்வி சாட்சியின் நடத்தையை கலங்கப்படுத்துவதாக ஆட்சேபனை செய்யப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரையை பரிசிலீத்து பார்க்கும்போது மேற்கண்டாவாறு கட்சி செய்யப்படாததால் வாதி தரப்பில் ஆட்சேபனை ஏற்று கொள்ளப்பட்டது.

15. என்னுடன் பிறந்த தம்பியான ஆறுமுகம் வெளிநாட்டில் இருப்பதால் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தம்பி மனைவி நாகம்மாளை குடும்ப மேலாளர் என்ற முறையில் நான்சேர்த்து உள்ளது தவறு என்றாலும், அவ்வாறு சேர்க்க முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாகம்மாளுக்கு எந்த உரிமையும் இல்லாததால் அவர் வாதியாக செயல் பட முடியாது என்றால் சரியல்ல. நான் இலங்கையில் இருந்து வந்து சில காலத்தில் தாவா சொத்தை பாகம் பிரித்து கொண்டு புல எண். 168/5 கீழ் புறத்தில் தென்புறம் 35 சென்ட் இடம் பிரதிவாதியின் தந்தையாருக்கு ஒதுக்கப்பட்டது என்றாலும், எனது தகப்பனார் முத்தையாவிற்கு புல எண் 168/4 55 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றாலும், காளிமுத்துவிற்கு 168/4 b யில் 54 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றாலும், 168/5a-யில் 16 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றாலும், சரியல்ல.

16. 168/4 b யில் காளிமுத்துவின் வாரிசுகள் வீடு கட்டி குடியிருக்கிறார்கள் என்றால் குடியிருக்கிறார்கள். காளிமுத்துவின் வாரிசுகள் மேற்படி புல எண்ணில் அவர்கள் சொத்து என்ற உரிமையில் குடியிருக்கிறார்களா என்றால் இல்லை. என் அப்பா காளிமுத்து ஊனமுற்றவர் என்பதால் அங்கு இருக்க சொன்னார். 168/4 இடத்தை அடமானம் வைத்து பிரதிவாதியின் தகப்பனார் வீடு கட்டினாரா என்றால் இல்லை. மேற்கண்டவாறு கடன் வாங்கி கட்டிய வீட்டை என் சகோதரர் ராதாகிருஷ்ணன் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. ராதாகிருஷ்ணன் தான் மேற்கண்ட இடத்தில் குடியிருந்து வருகிறார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. UDR க்கு முன்பே என்

தகப்பனாருக்கு பாகம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. பாகத்தின் அடிப்படையிலேயே தனித்தனியாக பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல 18.11.1960 லேயே புயல் நிவார்ண லோன் அடைப்பதற்கு ராக்கம்மாள் கிரையம் கொடுத்து மேற்படி ராக்கம்மாள் 10.10.1969-ல் இரத்தினக்கோட்டை பக்கிரி முகமது மகன்கள் மைனர் இராஜா முகமது கார்டீயன் தாயார் சையது பீவி மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு கிரைய விவரமும் பிரதிவாதிகளின் தந்தைக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவ்வாறு கிரையம் கொடுத்து விட்டு உரிமை பாராட்டி விட்டு உரிமை கோருவது சரியல்ல. பக்கிரி முகமது வகையாறாவின் பிரதிவாதிகள் அனுபவத்தை எந்த வகையிலும் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. உரிமையின் அடிப்படையிலும், பிரதிவாதியின் தந்தையாரின் பேருக்கு UDR பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் முன்பு பிரதிவாதியின் தகப்பனாரை தரப்பினராக சேர்த்து இருந்தால் உண்மை தெரிய வரும் என்பதால் அவரை தரப்பினராக சேர்க்காததால் தாவா வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வீடு கட்டியும் குப்பை குழி சேர்த்தும் மாடு கட்டியும் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 168/5 b பிரதிவாதியின் தந்தை பேரில் இருந்த பட்டா எந்த அனுமதியும் பேரிலும் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 57/2005 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 27.12.2004-ல் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டுள்ளோம் என்றால் வீட்டின் சுவர் சிதிலம் அடைந்து விட்டது. அதை வேலை பார்ப்பதற்காக இந்த வழக்கு போட்டியுள்ளேன். நான் சொல்வது போல் எந்த வழக்கு மூலமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கது இல்லை என்றாலும், அண்ணன் இராதாகிருஷ்ணன் சொன்னதன் அடிப்படையில் வழக்கில் தரப்பினராக இருந்து அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.